செ.வெ.எண்-13 நாள்-08.02.2017

# அரியலூர் வட்டத்தில் உள்ள பல்வேறு உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்த சிறப்பு தன்னிறைவு திட்டத்திற்கான காசோலையினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.எ.சரவணவேல்ராஜ் இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

அரியலூர் ஆட்சியர் அலுவலகத்தில், அரியலூர் வட்டத்தில் உள்ள பல்வேறு உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்த சிறப்பு தன்னிறைவு திட்டத்திற்கான காசோலையினை மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ் இ.ஆ.ப., அவர்கள்** வழங்கினார்.

**இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்தாவது:-**

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அரியலூர் மாவட்டம், அரியலூர் வட்டத்தில், பொதுமக்கள் பங்களிப்புடன் செயல்படுத்தப்படும் சிறப்பு தன்னிறைவு திட்டத்தின் கீழ் அரியலூர் தொழிற்பயிற்சி மையத்தில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த பொதுமக்கள் பங்களிப்பு தொகை ரூ.2,58,333/-ம் மற்றும் ஆலந்துறையார்கட்டளை பஞ்சாயத்து, பனங்கூர் வடிகால் குட்டை தடுப்பு சுவர்கட்டுதற்கும், கழிவுநீர் வடிகால் கட்டுவதற்கும் பொதுமக்கள் பங்களிப்பு தொகை ரூ.8,84,000/-க்கான காசோலைகளை தி/ள் அல்ட்ராடெக் சமூக நல அறக்கட்டளை சார்பாக ரெட்டிபாளையம் அல்ட்ரா சிமெண்ட் நிறுவன வழங்கியுள்ளது மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப,** அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் ரெட்டிபாளையம் அல்ட்ரா சிமெண்ட நிறுவன செயல்தலைவர்/அலகு தலைவர் திரு.வி.கணேசன், மாவட்ட வருவாய் அலுவலர் (பொ) திரு.பா.ரெங்கராஜன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.யோகேஸ்வரி ஆகியோர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**